## திருவருகைக்காலம் நான்காம் ஞாயிறு (Tamil)

## Fourth Sunday of Advent

### ஏசாயா 7:10-14 உரோ 1:1-7,மத் 1:18-24.

***"நம்பிக்கையிலும், நேர்மையிலும் உறுதியாய் நிற்கும் உறவுகள் வழியாகவே கடவுள் தன்னை வெளிப்படுத்துகிறார்."***

### திருப்பலி முன்னுரை:

**சில ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவில் கடும் பனியுடன் கூடிய மிகப்பெரிய புயல் ஒன்று ஏற்பட்டது. அப்போது அங்குள்ள ஒரு சிறிய கிராமமானது மின்சாரம் இன்றி மூன்று நாட்களாக இருளில் மூழ்கியது. மின்சாரம் இன்றி அங்குள்ள தெருக்கள் இருட்டாக இருந்ததால் மக்கள் நடமாடுவதற்கு கூட முடியவில்லை. அனைவருடைய மத்தியிலும் அச்சம் நிலவியது. ஆனால் அங்குள்ள மலை மேல் இருந்த ஒரு வீட்டில் மட்டும் வெளிச்சம் காணப்பட்டது. விசாரித்தபோது அந்த வீட்டில் மட்டும் மெழுகுவர்த்தியினால் வெளிச்சம் உள்ளது என அறிய முடிந்தது.**

**அவர்களிடம் இந்த மூன்று நாட்களும் மின்சாரரம் இன்றி அனைவரும் திண்டாடிக் கொண்டிருக்கும் போதுநீங்கள் மட்டும் எப்படி அமைதியாக இருந்தீர்கள்? என்று கேட்டபோது அவர்களின் பதில் எளிமையான மன உறுதியுடைய பதிலாக அமைந்திருந்தது.**

**" எங்கள் வீட்டில் மெழுகுவர்த்தி எப்போதும் தயாராக இருக்கும்" என்றார்கள்.**

**"மெழுகுவர்த்தியும் நம்பிக்கையும்".**

**இறை இயேசுவில் பிரியமான அன்பு சகோதர சகோதரிகளே!**

**திருவருகைக் காலத்தின் நான்காம் ஞாயிறை சிறப்பித்துக் கொண்டிருக்கின்றோம். திருவருகைக் காலத்தின் அடையாளமாக நான்கு மெழுகுவர்த்திகளும் ஏற்றப்பட்டு பிரகாசமாக எரிந்து கொண்டு இருக்கின்றன. இயேசுவின் பிறப்புக்கு மிக அருகில் உள்ள இறுதி வார்த்தை குறிக்கிறது. இந்த ஞாயிறு "அன்பின் ஞாயிறு" என அழைக்கப்படுகிறது. இது அன்னை மரியாவின் கீழ்ப்படிதல், இறைவனின் வாக்குறுதி மற்றும் பெத்தலகேமில் இயேசுவின் வருகை இவற்றை மையமாகக் கொண்டது.**

**இந்த உலகம் இருள் சூழ்ந்தும் நிலையற்றதாக தோன்றலாம். ஆனாலும் கடவுளின் ஒளி ஒருபோதும் அணையாது. ஏனெனில்,**

**நாம் ஒளியின் மக்களாக இருக்கிறோம், என்பதை திருஅவை நினைவு படுத்துகின்றது.**

**இன்று ஏற்றப்படுகின்ற கடைசி மெழுகுவர்த்தியானது முழுமையான நம்பிக்கையில்லாஇவ்வுலகில் நம்பிக்கையோடு இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்பிக்கையாளர்களுக்காக இந்த மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருக்கின்றது. தங்களுடைய திட்டங்கள் கனவுகள் அனைத்தும் கலைந்து போனாலும் கடவுளை விடாமல் பற்றி கொண்டிருக்கும் யோசப்பை போன்றவர்களுக்காக இம் மெழுகுவர்த்தி எரிகின்றது.**

**இன்றைய நற்செய்தி வாசகம் யோசேப்பின் குணநலன்களோடு, அதாவது அமைதி, கருணை, நம்பிக்கை என்னும் பார்வையோடு இந்த கிறிஸ்துமஸ் பெருவிழாவை கொண்டாட நமக்கு அழைப்பு விடுகின்றது.**

**ஒரு கனவு எப்படி ஒரு குழப்பத்தை களையவும், மன அழுத்தத்தை தனி வீரியமாக மாற்றவும் உதவியது என்பதை அவரது வாழ்வு நமக்கு சுட்டிக்காட்டுகாட்டுகிறது.**

**இந்த உலகம் இடைவெளி இன்றி நம் இதயத்தை போல் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கின்றது. ஆனால் இந்த திருவருகைக் காலம் இதயத்தை போல் தொடர்ந்து இயங்காமல் நம்மை சில நிமிடங்கள் நின்று சுவாசிக்கவும் யோசிக்கவும் நமக்கு கால அவகாசம் கொடுக்கின்றது.**

**கடவுளின் வாக்குறுதிகள் வெறும் வார்த்தை அல்ல.மாறாக, நம் வாழ்க்கையில் அனைத்தையும் அது வல்லமையோடு செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது.**

**ஆகையால் அன்பு இறை மக்களே! புனித யோசேப்பை போல் அமைதி, நம்பிக்கை இவற்றால் நம் இதயங்களை நிரப்பி வைப்போம். கடவுளின் ஆலயங்களாக விளங்கும் நம் இதயங்களிலும் உள்ளங்களிலும் இயேசு பாலன் வந்து பிறக்க நம்மையே நாம் தயார் செய்வோம்.**

# மறையுரை:

ஒரு முறை குருவானவர் தனது ஊரில் வாழ்ந்த வயதான தச்சர் ஒருவரின் கதையைக் கூறினார். அந்த தச்சர் அமைதியானவர், உண்மையுள்ளவர். நாள்தோறும் திருப்பலியில் பங்கு பெறுவார். அவரது மனைவி இறந்தபோது அவருக்கான சவப்பெட்டியை அவரே வடிவமைத்தார்.மரத்தை மென்மையாக செதுக்கி, மிக அழகாக, நுண்ணிய வேலைப்பாட்டோடு, அதை அளப்பரிய அன்போடு, கண்ணும் கருத்துமாகச் செய்தார். பின்பு அதனுள் "நம்பிக்கை" என்ற வார்த்தையை மட்டுமே எழுதினார். அவரது மனைவியின் இறுதிச்சடங்கில் அவர் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஆனால் குருக்களின் மறையுரையை விட, அவரது மௌனமும் நம்பிக்கை என்ற சொல்லும் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

அந்த தச்சரின் அமைதி யோசேப்பின் அமைதியை நினைவூட்டுவதாக உள்ளது. அந்த வயதான தச்ச எதுவும் பேசாமல் இருந்தது யோசேப்பின் குணத்தை ஒத்திருந்தது.

## 1) புனித யோசேப்பு:

"ஒரு வார்த்தையும் பேசாதவர் ஆனால் எல்லாவற்றிலும் நம்பிக்கை வைத்தவர்".

ஒரு கற்பனை செய்து பார்ப்போம். புனித யோசேப்பு ஒரு நாட்டு குறிப்பேடு (Diary) வைத்திருந்தால் எப்படி இருக்கும்? மரியாள் இயேசுவை கருத்தாங்கி இருக்கிறாள் என்று அறிந்த அந்த நாளில் அவர் என்ன எழுதினார்? அவரது கனவுகள் மிகவும் எளிமையானவை. ஒரு சிறிய வீடு. அங்கு அவர் நேசித்த பெண் மரியாளோடு அவர் வாழ்ந்த மகிழ்ச்சியான வாழ்க்கை.

திடீரென கடவுள் ஒரு நாள் அவரது கதையை மாற்றி விடுகிறார். நற்செய்தி யோசேப்பைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆனால் அவரது செயல்களைப் பற்றித் தெளிவாகக் கூறுகிறது.

அவர் இரு தலைக் கொள்ளி எறும்பு போல மன வேதனை மற்றும் இறைசித்தம் என இரண்டிற்கும் நடுவில் போராடிக் கொண்டிருந்தார். ஒரு புறம் உடைந்து போன அவரது மனம், மறுபுறம் இறைவனின் புனிதமான அழைப்பு.

இன்றைய உலகில் இது எப்படி சாத்தியமாகும்? என சற்று கற்பனை செய்து பாருங்கள்.

இறைபக்தி மிகுந்த தாழ்ச்சியான உள்ளம் கொண்ட தன் தொழிலை நீதியோடும் நேர்மையோடும் செய்து வருகின்ற உள்ளம் கொண்ட யோசேப்பு என்ற இளைஞரிடம் ஒரு நாள், மரியாள் கர்ப்பவதி ஆகி இருக்கிறாள் என்ற செய்தியை கேட்டதும் அவர் அதை எப்படி நம்பி இருப்பார்? அவரது மனநிலை எப்படி இருந்திருக்கும்.?

இதை எப்படி அவரால் நம்ப இயலும்? ஆனாலும் யோசேப்பு சினம் கொள்ளவில்லை. மரியாவை அவமானப் படுத்தவில்லை. அவளுக்கு எந்த தண்டனையும் கொடுக்கவில்லை. மாறாக என்ன செய்தார்? என்பதை புனித மத்தேயு தனது நற்செய்தியில், "அவளை அவமானப்படுத்த விரும்பாத நீதி மானாகிய அவர் மறைமுகமாக விலக்கி விட முடிவு செய்திருந்தார்."

அமைதியானவர்- வலிமையானவர். புனித யோசேப்பு இயேசுவின் வளர்ப்புத் தந்தை. மரியாளின் கணவர். தாவீது அரச பரம்பரையில் வந்தவர்.

நாசரேத்தில் வாழ்ந்த தச்சரான இவர் நேர்மையாளர். இறைவனின் சித்தத்திற்கு முற்றிலும் பணிந்தவர். இறைவனை விருப்பத்திற்கு தன்னை முற்றிலுமாக கையளித்தவர்.

## 2) "கருணையின் அமைதியான பலம்":

ஓர் இளம் மத போதகரின் மனைவியின் கதை ஒன்று கூறுவார்கள். திருமணத்திற்கு முன்பே அவள் கர்ப்பமாகிவிட்டாள். இந்தச் செய்தி அவர்களுடைய சொன்னார் அவளுடைய சபை முழுவதும் காட்டுத் தீ போலப் பரவியது.மக்கள் கிண்டலும் கேலியுமாக வசை பாடினர்.அவளுக்குஏதாவது தண்டனை கொடுக்க வேண்டுமென தீர்ப்பளித்தனர். அங்கிருந்த முதியவர் சொன்னார் 'பெண்ணைப் பற்றி இழிவாகப் பேசுவதற்கு பதிலாக அவளுக்காக ஜெபிப்போம்' என்றார். சில மாதங்களுக்குப் பிறகு அந்த இளம் பெண் தனது குழந்தையை தூக்கிக் கொண்டு திருப்பலிக்கு வந்த போது அதே முதியவர் அவள் அருகில் நின்று குழந்தையை தூக்கிக் கொண்டு 'ஒவ்வொரு உயிரும் கடவுளின் ஆசிர்வாதம் எனவே கடவுளின் இரக்கம் எப்போதும் புதிதாகும்' என்று மெல்லிய குரலில் கூறினார்.

அந்த முதியவர் இளகிய மனம் புனித யோசப்பின் மனநிலையை ஒத்திருந்ததை நம்மால் காண முடிகிறது.

அவள் எந்த வித குறையையும் கூறாமல் இறை இரக்கத்தையும் தன்மையையும் விட பாதுகாப்பையும் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

உண்மையான மனவலிமை என்பது, கட்டுப்பாட்டிலோ அல்லது பழி வாங்கலிலும் இல்லை என்பதை புனித யோசேப்பு நமக்கு சுட்டிக்காட்டுகிறார்.அந்த இரக்கம் விலைமதிப்பற்றது.

### 3)" கட்டுப்பாடல்ல, பழியல்ல... தியாகத்துடன் கூடிய கருணை"

யூத மரபில் பழமொழி ஒன்று உண்டு. "நீ யாருடன் நடக்கிறாய் என்று சொல், நீ யாரென்று நான் உனக்கு சொல்வேன்" மரியாள் யோசேப்புடன் நடந்தாள். எனவே அவரிடம் இருந்து இரக்கத்தையும் தாழ்ச்சியையும் இன்னும் அதிகமாக கற்றுக் கொண்டார்.

கானாவூர் திருமணத்தைப் பற்றி சற்று சிந்தித்து பார்ப்போம். இரசம் தீர்ந்து போன போது திருமண வீட்டாரை பற்றி பலர் பலவாறாக பேசிக் கொண்டிருக்க அவள் தன் மகனிடம் அவர்களிடம் இரசம் இல்லை தீர்ந்துவிட்டது என்று மட்டுமே சொன்னாள். பிறரை அவமானப்படுத்தாமல் தேவையில் உதவி செய்ய வேண்டும் என்ற இரக்க குணம் மீண்டும் ஆக இந்நிகழ்வில் காணப்படுகிறது. இதையும் மரியாள் தன் மகனிடம் இருந்து கற்றுக் கொண்டாள்.

### 3) "அனைத்தையும் மாற்றிய கனவு":

யோசேப்பு தூங்கிக் கொண்டிருக்கிறார். அப்போது வானதூதர் கனவில் வந்து "மரியாளை உன் மனைவியாக ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம். ஏன்? கனவின் மூலம் இந்த செய்தி தரப்பட்டது. ஏனெனில் யோசேப்பு அமைதியானவர். எனவே இறைவனின் குரலுக்கு எப்போதும் செவி சாய்க்க அவர் தயாராக இருந்தார்.கடவுள் நம்மிடம் பேச காத்துக்கொண்டிருக்கின்றார். ஆனால் நம் வாழ்வில் நாம் அமைதி இன்றி பலவற்றைக் குறித்து கவலைப்பட்டுக் கொண்டு மன அமைதியற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பதால் இறைவனின் குரலை நம்மால் கேட்க முடிவதில்லை. யோசேப்பைப் போல் அமைதியில் வாழ்ந்தால் மட்டுமே இறைவனின் குரலை கேட்க முடியும்.இந்த திருவருகைக் காலம் அப்படிப்பட்ட அமைதியை நம்மில் மலரச் செய்யட்டும்.

கடவுள் இன்றும் பல்வேறு சூழல்களில் நம்மோடு பேசிக்கொண்டு தான் இருக்கின்றார். ஒரு நண்பன் நமக்கு ஆலோசனையோ அல்லது அறிவுரையோ கூறும்போது, ஒரு குழந்தை ஒன்றை அறிந்து கொள்ள நம்மிடம் கேள்விகள் கேட்கும்போது, அமைதியில் இறைவனோடு உறவாடும் பொழுது, பல  வேலைகளில் இறைவனின் குரலை நம்மால் கேட்க முடிகின்றது. டாக்டர் மார்ட்டின்   லூதர் கிங் ஒரு முறை என்னிடம் கனவு ஒன்று உள்ளது என்று கூறினார்.ஆனால் அவர் திட்டம் என்று கூறவில்லை. கனவுகள் என்பது நாம் கட்டுப்படுத்தக் கூடியதைத் தாண்டி நம்மை இழுக்க கடவுள் பயன்படுத்தும் ஒரு சாதனம் ஆகும். திட்டத்தை விட கனவுகள் முக்கியம். கனவுகள் நம்மை நம்பிக்கை உடன் வாழ வலியுறுத்துகின்றன. யோசேப்பும் ஒரு கனவு கண்டார்.அவர் கனவை ஏற்றுக் கொண்டு அதை பின்பற்றி வாழ்ந்தார். யோசேப்பு விழித்த பின், வான தூதர் கட்டளையிட்ட படி செய்தார் என்று மத்தேயு  தனது நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். வானதூதரின் சொற்களைக் கேட்டு அவர் அதைப் பற்றி விவாதம் எதுவும் செய்யவில்லை. காலம் தாழ்த்தவில்லை. பெருமை பாராட்டவும் இல்லை.ஆம்! நம்பிக்கை என்பது அனைத்தையும் புரிந்து கொள்வது அல்ல.அடுத்த அடியை எடுத்து வைக்கத் தேவையான நம்பிக்கையே ஆகும்.

### 4.) "நிழல்களில் நடந்த கீழ்படிதல்":

யோசேப்பின் வாழ்வில், வானதூதரின் வார்த்தைகளுக்கு ஒவ்வொரு முறையும் அவர் கீழ்ப்படிந்தவராகவே இருந்தார். இது ஒரு இழப்பாகவே அவருக்கு இருந்தது.

மரியாளை மனைவியாக ஏற்றுக் கொண்டார். இந்த சமுதாயம் எப்படி எல்லாம் இழிவாகப் பேசும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆனாலும் அவர் அமைதியோடு ஏற்றுக் கொண்டார். எல்லாவற்றையும் விட்டுவிட்டு எகிப்திற்கு ஓடிப் போங்கள் என்று கூறிய போதும் குழந்தையை கொல்ல தேடிய ஏரோது மன்னன் இறந்து விட்டான். எனவே மீண்டும் உங்கள் ஊருக்கு செல்லுங்கள் என்று கூறியபோதும், ஒவ்வொரு முறையும் தன் வாழ்வை அவர் புதிதாகவே தொடங்க வேண்டியிருந்தது. இருப்பினும் ஒவ்வொரு முறையும் அந்த நிச்சயமற்ற வாழ்வில் அடி எடுத்து வைத்து கடவுளிடம் கட்டளைக்கு காத்திருந்தார், கீழ்ப்படிந்தார்.

ஒருவன் தனது மகளை இழந்த துக்கத்திலிருந்து எழும்ப ப் போராடிய போது அவர் சொன்னார். "என் துக்கம் கடவுளின் குரலை மறைக்காத படி பார்த்துக்கொண்டேன்". இதுதான் யோசேப்புவின் மனநிலையும் கூட... இறைவன் மீது கொண்ட அச்சத்தினால் அல்ல.மாறாக அன்பும் கீழ்படிதலும் மட்டுமே.புனிதம் என்பது பெரிய பெரிய சொற்களில் அல்ல. அமைதியாகவும் மறைமுகமாகவும் செய்யப்படும் நம்பிக்கை ஒரு செயல்களில் மட்டுமே வெளிப்படுகிறது.

5) "நம்பிக்கையின் எதிரொலி ஏசையாவும் பவுலும்":

"இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகனைப் பெற்றெடுப்பார், குழந்தைக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவீர்" என்று இறைவாக்கினார் ஏசாயா வாயிலாக ஆண்டவர் உரைத்தது இதுவே.அவர் ஒரு இராணுவ வீரன் அல்ல. அரசனும் அல்ல. இப்புலகில் ஒரு குழந்தையாக பிறக்கிறார். அதனால் நாமும் அக் குழந்தையோடு நெருங்கிப் பழக முடியும். மேலும் யோசேப்புவின் 'ஆம்' என்ற வார்த்தை மூலமே அந்த இறைவாக்கு நிறைவேறியது.

இன்றைய இரண்டாம் வாசகத்தில், புனித பவுல் "நீங்களும் இயேசு கிறிஸ்துவுக்கு உரியவர்களாய் இருக்க அழைக்க பெற்றுள்ளீர்கள்" என்று அறைகூவல் விடுக்கின்றார்.

நாமும் யோசேப்பை போல் கனவு காணாமல் இருக்கலாம். ஆனால் இறைமகன் இயேசுவை இவ்வுலகில் பிரதிபலிப்பதற்கான அவரது அழைப்பை ஏற்றுக் கொள்கின்றோம் .

மரியாளின் நிலையை யோசேப்பு வெளியில் கூறாமல் அவரை பாதுகாத்தார். யோசேப்பு அனைத்தையும் தெரிந்து கொள்ளவில்லை. ஆனால் கடவுளின் திட்டத்தில் நம்பிக்கை வைத்தார்.அன்பு அமைதியாக செயல்படும் இடத்தில் யோசேப்பின் பணி இன்றும் நம் மூலம் தொடங்குகிறது.

6) "வாழ்க்கை திட்டமிட்டபடி இல்லாத போது":

இன்றைய அவசர உலகில் திட்டமிட்டபடி நாம் வாழ முடியவில்லை. திட்டமிடாத ஒரு வாழ்க்கை சூழலில் தான் நம்மில் பலர் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்றால் அது மிகையாகாது.

எதிர்பாராமல் வரும் நோய், தீராத நோய்கள், நம் சூழலை மாற்றி அமைக்கும் தொழில், சுமையாகத் தோன்றும் குடும்ப சூழ்நிலை இவை அனைத்தையும் யோசேப்பும் சந்தித்தார்.

எல்லாம் என் விருப்பப்படி நடக்க வேண்டும் என்று நினைப்பது அல்ல. முடிவுகளை நான் தீர்மானிக்க வேண்டும் என்பது அல்ல.மாறாக நான் என் கடமையை செய்வேன் அதன் விளைவுகளை கடவுளிடம் ஒப்படைப்பேன் என்ற மனநிலையும் நம்பிக்கையே ஆகும்.

மரவேலை செய்பவர்களிடையே ஒரு பழமொழி உண்டு. மரத்தில் தானியம் உளிக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது. ஆனால் அந்த எதிர்ப்புதான் அதன் அழகை வெளிப்படுத்துகிறது என்பது இதன் பொருள். கடவுள் ஒரு கலைஞர். நாம் ஒரு மரத்துண்டு அல்ல.உருவாகிக் கொண்டிருக்கும் ஓர் அரிய படைப்பு. நம் வாழ்வில் வரும் சோதனைகள் வேதனைக்கு அல்ல. சாதனைக்காகவே. நம்மை உடைக்க அல்ல. நம்மை உருவாக்கவே. உளியின் அடியில் தான் உருவம் பிறக்கிறது.துன்பத்தை அர்த்தமுள்ளதாக பார்ப்பதற்குக் கூறப்படும் உவமைதான் இது.

யோசேப்பின் வாழ்விலும் அப்படித்தான் இருந்தது புரியாத சூழலகள், பயம் தன் நிலைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் என அனைத்தும் உளியின் அடி போல விழுந்தன. ஆனாலும் அந்தக் உளியின் வலி அவரை அழிக்கவில்லை. மாறாக,கடவுளின் கையில் உள்ள அழகிய வடிவமாக நீதிமானாக, குடும்பத்தின் பாதுகாவலராக திரு அவையின் பாதுகாவலராக அவை மாற்றியது.

### 7) "ஒரு தந்தையின் ஆம் என்று வார்த்தை":

போதகர் ஒருவர் ஒரு முறை தனது தந்தையை பற்றி கூறினார்".என தந்தை ஒருபோதும் நற்செய்தி அறிவித்ததில்லை. அறிவுரை கூறியதும் இல்லை.ஆனால் என் தாயார் புற்றுநோயால் படுத்திருந்தபோது தினமும் அவரது காயப்பட்ட பகுதிகளுக்கு மருந்து இட்டார். அவரால் நடக்க முடியாமல் இருந்தபோது ஆலயத்திற்கு அவரே தன் மனைவியை தூக்கிக் கொண்டு வந்து ஜெபிக்க வைத்தார். இறுதியில் என் தாயார் இறந்தபோது அவர் அமைதியாக அமர்ந்து அழுது கொண்டிருந்தார். ஒருபோதும் தனது இறை நம்பிக்கையில் அவர் தளர்ந்து போகவில்லை. அதை ஏற்றுக் கொண்டு வாழ்ந்தார்.

### 8) "இன்று நமக்கு யோசேப்பு ஏன் தேவை? "

அமைதியற்ற உலகில்  யோசேப்பு அமைதியை கற்பிக்கிறார். சீற்றமிகு  கலாச்சாரத்தில் யோசேப்பு இரக்கத்தைக் கற்பிக்கிறார். பயம் நிறைந்த காலத்தில், யோசேப்பு நம்பிக்கையைக் கற்பிக்கிறார்.

அவர் கூச்சலிடவில்லை. அனைத்திலும் தன்னை முன்னிறுத்தியதும் இல்லை. ஆனால் அமைதியாகத் தன் கடமைகளைச் செய்தார். வார்த்தைகளால் அல்ல, வாழ்க்கையால் பேசினார். இன்றைய உலகிற்கு யோசேப்பை போல அமைதியாக நிற்கும் மனிதர்கள் தான் தேவை.  அமைதி பலவீனம் அல்ல. கீழ்ப்படிதல் அடிமைத்தனம் அல்ல.நம்பிக்கை அறியாமை அல்ல. முழு புரிதல் கூட இல்லாமல் 'ஆம்' என்று சொல்லும் ஒரு நம்பிக்கையாளன் தான் உண்மையான சீடன்.

ஓர் ஊரில் வயதான போதகர் ஒருவர் தன் மனைவியை மிகவும் அன்பாகக் கவனித்துக் கொண்டார். தன் பலவீனமான மனைவியை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவர் ஆலயத்திற்கு சுமந்து செல்வார்.

ஏன் சக்கர நாற்காலியை பயன்படுத்தவில்லை? எனக் கேட்டபோது அந்த போதகர் புன்னகை பூத்த முகத்துடன்,  "நான் அவளை என் கைகளில் சுமப்பதற்கு முன்பே என் இதயத்தில் சுமந்தேன்" என்று கூறினார். ஆம்! யோசேப்பு கேள்விகள் கேட்காமல் அமைதியோடு தன் கடமையில நின்று மரியாவை அன்பாய் கவனித்துக் கொண்டார்.

கடவுளின் திட்டத்தை நம்பிக்கையுடனும் மென்மையுடனும் சுமந்தார். இன்றைய திருவருகை காலம் நம்மிடம் கேட்கும் கேள்வி இதுதான்.

நான் ஒளியாக இருக்க வேண்டுமா அல்லது அந்த ஒளியை சுமக்கும் யோசேப்பாக இருக்க தயாரா? இன்று சிந்தனையோடு கிறிஸ்து பிறப்பை எதிர்கொள்வோம். ஆமென்.

- Translated into Tamil by Dr. Hilda Christy, Chennai